செய்திக் குறிப்பு எண்: 46 நாள்: 30.11.2024

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (30.11.2024) சென்னை, சேப்பாக்கம், எழிலகத்தில் அமைந்துள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆய்வு மேற்கொண்ட பிறகு செய்தியாளர்களை சந்தித்து அளித்த பேட்டி.**

தொடர்ந்து இரண்டு, மூன்று நாட்களாக மழை பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் மூலம் எச்சரிக்கைப்பட்டிருந்த நிலையில், தமிழ்நாடு அரசு அது குறித்து தொடர்ந்து ஆய்வு நடத்தி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அது உங்களுக்கு நன்றாக தெரியும். நேற்றிரவு கடுமையான மழை பெய்திருக்கிறது. தொடர்ந்து மழை பெய்து கொண்டிருக்கிறது. இன்று இரவு புயல் கரையை கடக்கும் என்று செய்தி வந்திருக்கிறது.

இந்நிலையில் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர், காஞ்சிபுரம், திருவள்ளூர், இராணிப்பேட்டை, செங்கல்பட்டு ஆகிய மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் தொடர்புகொண்டு அங்கிருக்கக்கூடிய நிலவரங்களை எல்லாம் கேட்டு தெரிந்து கொண்டோம். நிவாரணப் பணிகள் எந்தளவிற்கு நடந்து கொண்டிருக்கிறது என்பதையும் தெரிந்து கொண்டோம். நிவாரண முகாம்கள் எல்லாம் ஆங்காங்கு அமைக்கப்பட்டு மக்களும் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். உணவும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்று இரவு நிச்சயமாக கடுமையான மழை பெய்யும் என்கின்ற காரணத்தால், முழுமையான நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்று நாங்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு உத்தரவிட்டிருக்கிறோம்.

**கேள்வி :** சென்னை தவிர மற்ற மாவட்டங்களில் என்ன நிலை என்பது பற்றி....

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில்** : மற்ற மாவட்டங்களில் அந்தந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய பொறுப்பு அமைச்சர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அலுவலர்கள் அந்தப் பணிகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**கேள்வி:** ஸ்மார்ட் சிட்டி தி.நகர் பகுதிகளில் தண்ணீர் தேங்குவதாக குற்றச்சாட்டு வந்தது. தற்போது சரிசெய்யப்பட்டு விட்டதா?

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் :** இப்போது இல்லை. தற்போது தண்ணீர் வடிந்து கொண்டிருக்கிறது. ஒன்றும் பிரச்சனை இல்லை.

**கேள்வி** : மழை தொடரும்பட்சத்தில், சென்னைக்கு எந்த மாதிரியான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில்** : சென்னையில் எங்கு தண்ணீர் தேங்குமோ, அந்த இடத்திற்கு முன்கூட்டியே நாங்கள் அதற்குரிய நிவாரண நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்ற காரணத்தினால் இப்போது எந்தவித பிரச்சனையும் இல்லை என்பதுதான் செய்தி. அப்படி இருந்தாலும் அது சமாளிக்கப்படும்.

-----

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu